3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

27. யாதொரு வணிகர், தொழிற்சாலையின் சொந்தப் பயனுக்காக மின் உற்பத்தி சாதனங்கள்மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்வதில் பயன்படுத்துவதற்காக, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள தொழிலக நுகர்வோருக்கு விற்பனை செய்கிற எரியுலை எண்ணெய் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு மற்றும் கால அளவிற்கு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2)த் துறையின் 5–10–2010 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

28. மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

29. மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

30. வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

31. தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

32. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)